செ.வெ.எண் : 43 / ஆகஸ்ட் நாள் : 22.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கான எரிசக்தி மற்றும் மின்சக்தி சிக்கனம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(22.08.2017) மாவட்ட தொழில்மையம் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கான எரிசக்தி மற்றும் மின்சக்தி சிக்கனம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கினை துவக்கி வைத்தார்.

கருத்தரங்கினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

இந்திய தேசத்தின் முதுகெலும்பாக விவசாயம் கருதப்படுகிறது. அதற்கடுத்தபடியாக சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கள் தங்களது தொழில்திறன் மற்றும் உற்பத்திதிறனை மென்மேலும் அதிகரித்திட எரிசக்தி மற்றும் மின்சக்தியினை சிக்கனமாக பயன்படுத்துவது இன்றியமையாதது ஆகும். மின்சக்தி தேவைக்கும் மின்சக்தி நுகர்வுக்கும் இடையேயான இடைவெளியினை கண்டறிந்து, எந்தெந்த வகையில் மின்சிக்கனத்தினை ஏற்படுத்திட முடியும் என்ற வழியினை ஆராய்ந்து செயல்படுத்துவதன் மூலம் தொழில்முனைவோர்களது தொழில்திறன் மேம்படும். உதாரணத்திற்கு முந்தைய காலகட்டங்களில் வெண்சுடர் எரிவிளக்குகள் (Incandescent Lamp - குண்டு பல்பு) பயன்படுத்தப்பட்டு வந்தன. மின்சிக்கனம் கருதி இதற்கு மாற்றாக ஒளிரும் விளக்குகள் (Tube Light) அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போதைய காலகட்டத்தில் இதற்கும் மாற்றாக CFL, LED பல்புகள் போன்ற கூடுதல் மின்சிக்கன விளக்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் மொத்தம் 15.61 இலட்சம் எண்ணிக்கையிலான பதிவுபெற்ற சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் மொத்தம் 99.78 இலட்சம் மக்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இதுதவிர, மாவட்ட தொழில்மையத்தின் மூலம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுய தொழில் துவங்குவதற்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் 2016-2017ஆம் நிதியாண்டில் நீட்ஸ் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு மானியத்துடன் கடனுதவிகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதில் இராமநாதபுரம் மாவட்டம் சிறப்பாக செயல்பட்டு 27 இளைஞர்களுக்கு மொத்தம் ரூ.192 இலட்சம் மதிப்பிலான மானியத்தில் கடனுதவி வழங்கியதன் மூலம் தமிழ்நாட்டில் நான்காவது இடத்தில் உள்ளது.

அதன் தொடர்ச்சியாக தற்போது மாவட்ட தொழில் மையத்தின் மூலம் சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கு எரிசக்தி மற்றும் மின்சக்தி சிக்கனத்தினை ஊக்கப்படுத்திடும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்களில் எரிசக்தி மற்றும் மின்சக்தி சிக்கனம் குறித்த தணிக்கை மேற்கொள்ள தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்திடும் வகையில் ஆற்றல் சிக்கன மேம்பாடு குறித்த தணிக்கைக்கு 50 சதவீத மானியம் (அதிகபட்சம் ரூ.75,000/-) பழைய இயந்திரங்களை மாற்றி நவீன இயந்திரங்கள் நிறுவி மின்சிக்கனத்தினை அதிகரிக்கும் நிறுவனங்களுக்கு இயந்திர முதலீட்டில் 25 சதவீதம் (அதிகபட்சம் ரூ.2 இலட்சம்) மானியம் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் இந்த திட்டத்தினை முழுமையாகப் பயன்படுத்தி காலத்திற்கேற்றவாறு மின்சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் திருமதி.ப.மாரியம்மாள், தமிழ்நாடு மின்சாரவாரிய கண்காணிப்புப் பொறியாளர் திரு.கே.சின்னத்துரை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கே.எஸ்.சுரேஷ் பாபு, நபார்டு வங்கியின் துணை மேலாளர் திரு.எஸ்.மதியழகன், NPC துணை இயக்குநர் திரு.மு.உதயராஜ், வங்கி மேலாளர்கள் திரு.குணசேகரன் (IOB), திரு.குசலவன் (பாண்டியன் கிராம வங்கி) உள்பட அரசு அலுலவர்கள், தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**